# DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 318 / 2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 5 |
| Name | திருமதி. முத்துமாலை |
| Husband Name | மூக்கையா |
| Village | பெருங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 75 |

**(குவிமுச பிரிவு 299 ன் படி சமூக நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படுகிறது)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 09-07-2025.(நேரம்: 11.54 AM )

**முதல்விசாரணை**

1,நான் தற்போது பெருங்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் வீட்டில் குடிதனம் செய்து வருகிறேன்.

3. அசா 1 ஜகநாதபெருமாள் எனது மகன் ஆவார், சாட்சி சுப்புலெட்சுமியை எனக்கு தெரியும்.

4. இவ்வழக்கில் எதிரி பூமாவை எனக்கு தெரியும்.

5.சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் மாலை 06.00 மணியளவில் நானும், சாட்சி சுப்புலெட்சுமியும் சாமன் வாங்குவதற்காக ஏரலுக்கு சென்று விட்டு அங்கிருந்து பஸ்ஸில் எனது ஊர் பெருங்குளத்திற்கு வந்துக்கொண்டிருக்கும்போது இவ்வழக்கின் எதிரி பூமா எனது பணம் 10,000/- ரூபாயையும், 8 பவுண் எடையுள்ள எனது தங்க சங்கிலியை அறுத்துவிட்டாள்.

6.பின்பு இவ்வழக்கின் எதிரி பூமாவை கையோடு இழுத்துக்கொண்டு ஏரல் காவல் நிலையத்தில் ஒப்படைத்து எழுதிக்கொடுத்தேன்.

7.என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள முத்துமாலை என்ற கையெழுத்து என்னுடையது தான் .அது நான் கொடுத்த புகார் மனுதான் . **அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.